143, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை
(கிரீன்வேஸ் சாலை)
சென்னை - 600 028.
தொலைபேசி : 24951484, 24951486

# மாநில மனித உரிமைகள் ஆணையம்
## தமிழ்நாடு

<u>வேலை வாய்ப்பு அறிவிப்பு எண்.1/2022 நாள்.23.12.2022</u>

மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் அலுவலகத்தில், இரண்டு சுருக்கெழுத்து தட்டச்சர்கள் நிலை III, ஒரு தட்டச்சர், ஆறு அலுவலக உதவியாளர்கள் மற்றும் ஒரு இரவுக் காவலர் ஆகிய பணியிடங்களை நிரப்பும் பொருட்டு தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் கீழ்க்கண்ட மாதிரி விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து பின்வரும் சான்றிதழ்களின் நகல்களை தானே கையொப்பமிட்டு (Self Attested) இணைத்து அனுப்பவேண்டும்.

1. வயது மற்றும் கல்விச் சான்றிதழ் – (வயது குறிப்பிட்ட கல்விச் சான்றிதழ் /அரசு சார்ந்த அமைப்பு வழங்கிய பிறப்பு சான்றிதழ்)
2. தொழிற்கல்வி சான்றிதழ்
3. பணிமுன் அனுபவச்சான்றிதழ்
4. சாதிச் சான்றிதழ்
5. அரசிதழ் பதிவுபெற்ற அலுவலரிடமிருந்து (Gazetted Officer) பெறப்பட்ட மனுதாரரின் புகைப்படத்துடன் கூடிய நன்னடத்தை சான்றிதழ், புகைப்படமும் ஒப்புகை செய்து (Attested) <u>அசல் சான்றிதழ்</u> அனுப்பப்பட வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் செயலாளர், மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழ்நாடு, எண்.**143**.பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, (கிரீன்வேஸ் சாலை), சென்னை – **600 028.** என்ற முகவரிக்கு பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் அனுப்பி வைக்கவேண்டும். விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் பெறுவதற்கான கடைசி நாள்.**20.01.2023.**

எக்காரணத்தை கொண்டும் விண்ணப்பம் நேரில் பெறப்படமாட்டாது. **20.01.2023** தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் சரிவர பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது. விண்ணப்பத்தினை சரியாக பூர்த்தி செய்து அனுப்புவதும் தேர்வின் ஒரு அங்கமாகும். தனியரின் சான்றிதழ்களின் பரிசீலனைக்கு பின்னர் தகுதியானவர்களுக்கு மட்டும் தபால் மூலம் தேர்வு/நேர்காணலுக்கான தகவல் தெரிவிக்கப்படும்.

(த.பி.பா)

| வ. எண் | பதவியின் பெயர் | சம்பள விகிதம் | வயது | கல்வித் தகுதி | சான்றிதழ்கள் | இட ஒதுக்கீடு மற்றும் காலிபணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சுருக்கெழுத்து தட்டச்சர் – நிலை III | அடிப்படை ஊதியம் ரூ.20,600– 65.500 (ஏழாவது ஊதிய குழுவின் படி) | (அ) 18 வயது நிறைவு பெற்று இருக்க வேண்டும் <u>அதிகபட்ச வயது</u> (அ) பொது பிரிவினர்– 30 (ஆ) பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்–34 (இ) பட்டியல் பிரிவினர் – 37 | (1)அரசு கல்வி துறை இயக்குநரால் நடத்தப்பட்ட உயர்நிலை பள்ளி தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். (10ஆம் வகுப்பு) (2) தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்தில் (i) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்நிலை அல்லது (ii)தமிழ்–உயர்நிலை ஆங்கிலம் – இளநிலை அல்லது (iii) தமிழ் – இளநிலை ஆங்கிலம்–உயர்நிலை தகுதி பெற்றிருக்க வேண்டும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் இளநிலை பட்ட படிப்பு தேர்ச்சி பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | (1) பள்ளி மற்றும் கல்லூரி கல்விச் சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ் (2) தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து சான்றிதழ் (3) வயது சான்றிதழ் (4) சாதிச் சான்றிதழ் (5) இன்னார் ரென்று தெளிவுபடுத்தும் அரசு அதிகாரியின் கைப்யொப்பமிட்ட அடையாள சான்றிதழின் அசல் | 1. பொதுப் போட்டி–1 2.பிற்படுத்தப்பட்டோர்–1 பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் தவிர |
| 2. | தட்டச்சர் | அடிப்படை ஊதியம் ரூ.19,500– 62,000 (ஏழாவது ஊதிய குழுவின் படி | (அ) 18 வயது நிறைவு பெற்று இருக்க வேண்டும் <u>அதிகபட்ச வயது</u> (அ) பொது பிரிவினர்– 30 (ஆ)பிற்படுத்தப்பட்டோர் , மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்–34 (இ) பட்டியல் பிரிவினர் – 37 | அரசு கல்வி துறை இயக்குநரால் நடத்தப்பட்ட உயர்நிலை பள்ளி தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். (10ஆம் வகுப்பு) (2) தட்டச்சு (i) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உயர்நிலை அல்லது (ii)தமிழ்–உயர்நிலை ஆங்கிலம்–இளநிலை அல்லது (iii)தமிழ்–இளநிலை ஆங்கிலம்–உயர்நிலை தகுதி பெற்றிருக்க வேண்டும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் இளநிலை பட்ட படிப்பு தேர்ச்சி பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | (1) பள்ளி மற்றும் கல்லூரி கல்விச் சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ் (2) தட்டச்சு சான்றிதழ் (3) வயது சான்றிதழ் (4) சாதிச் சான்றிதழ் (5)இன்னார் ரென்று தெளிவுபடுத்தும் அரசு அதிகாரியின் கைப்யொப்பமிட்ட அடையாள சான்றிதழின் அசல் | பிற்படுத்தப்பட்டோர்–1 பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் தவிர |
| 3. | அலுவலக உதவியாளர் | அடிப்படை ஊதியம் ரூ.15,700– 50,000 (ஏழாவது ஊதிய குழுவின் படி | (அ) 18 வயது நிறைவு பெற்று இருக்க வேண்டும் <u>அதிகபட்ச வயது</u> (அ) பொது பிரிவினர்– 32 (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்–34 (இ) பட்டியல் பிரிவினர் – 37 | (1) 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். (2) மிதிவண்டி ஒட்ட தெரிந்திருக்க வேண்டும். | 1) பள்ளி மற்றும் கல்லூரி கல்விச் சான்றிதழ், (2) வயது சான்றிதழ் (3) சாதிச் சான்றிதழ் (4) இன்னார் ரென்று தெளிவுபடுத்தும் அரசு அதிகாரியின் கைப்யொப்பமிட்ட அடையாள சான்றிதழின் அசல் | 1.பிற்படுத்தப்பட்டோர்–2 பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்கள் தவிர 2. பொது போட்டி –2 3. பட்டியல் பிரிவு –1 4.மிகவும் பிற்படுத்தப்பட்டோர்– சீர்மரபினர்–1 |
| 4. | இரவு காவலர் | அடிப்படை ஊதியம் ரூ.15,700– 50,000 (ஏழாவது ஊதிய குழுவின் படி | (அ) 18 வயது நிறைவு பெற்று இருக்க வேண்டும் <u>அதிகபட்ச வயது</u> (அ) பொது பிரிவினர்– 32 (ஆ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்–34 (இ) பட்டியல் பிரிவினர் – 37 | தமிழ் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். | (1) வயது சான்றிதழ் (2) சாதிச் சான்றிதழ் (3) இன்னார் ரென்று தெளிவுபடுத்தும் அரசு அதிகாரியின் கைப்யொப்பமிட்ட அடையாள சான்றிதழின் அசல் | 1.மிகவும் பிற்படுத்தப்பட்டோர்– சீர்மரபினர்–1 |

ஒப்பம்/–
செயலாளர்
மாநில மனித உரிமைகள் ஆணையம்

/அனுப்பப்படுகிறது/

23/12/2022

பிரிவு அலுவலர்

# மாதிரி விண்ணப்படிவம்

1. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :

2. விண்ணப்பதாரரின் சாதி மற்றும் மதம் :

3. விண்ணப்பதாரரின் பெயர் :

4. தகப்பனார் / கணவர் பெயர் :

5. பிறந்த தேதி மற்றும் வயது :

6. கல்வி மற்றும் தொழில் கல்வியின் பெயர் :

7. நிரந்தர முகவரி :

8. தகவல் அனுப்பப்பட வேண்டிய முகவரி :

9. பணி முன்அனுபவம் :

10. இணைத்து அனுப்பபடுகின்ற சான்றிதழ்களின் விவரம் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்